1973 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: திருச்சி மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், பழைய ஜெயங்கொண்டத்திலுள்ள தச்சுப்பட்டரை நட்டத்தில் வேலை செய்கிறது. இதுபோன்ற பட்டறைகளின் தொழில் நுட்ப நிர்வாகக் கட்டுப்பாட்டை கதர் வாரியத்தின் கீழ் கொண்டுவரவும் அப்பட்டறைகளின் கண் காணிப்பு ஊராட்சி ஒன்றியங்களிடமே இருந்து வரவேண்டும் என்றும் அரசு முடிவு செய்துள்ளது.

Kotturpuram Housing Scheme

* 67 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the Housing and Urban Development Corporation, New Delhi, have undertaken to finance the Kotturpuram project of the State Housing Board; and

(*b*) if so, the details thereof?

THE HON. THIRU K. RAJARAM: (*a*) Yes.

(*b*) Housing and Urban Development Corporation Limited has sanctioned a sum of Rs. 195 lakhs. The HUDCO has so far released Rs. 39 lakhs for the Scheme. Further amounts will be released every quarter in the course of completion of the scheme.

கோவையில் குடிசை மாற்றுப் பணிகள்

* 68 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவையில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடு கட்டும் திட்டம் இந்த ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சென்னை மாநகரத்தில் மட்டுமே தற்சமயம் குடிசை மாற்று வாரியம் பணிபுரிந்து வருகின்றது. வெளியூர்களில் குடிசைப் பகுதி மாற்றும் திட்டங்கள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. கோவைப் புதூர் பகுதியிலும் கோவை நகர வின்சென்ட் சாலைப் பகுதியிலும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன.

திரு. சு. துரைசாமி: கோவை நகரத்தில் சுமார் பத்து இடங்களில் குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. குடிசைவாழ் பகுதியில் உள்ள மக்களுக்கு குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக இன்னும் விரிவாக விடுகள் கட்டிக் கொடுக்க அரசு உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தமிழகத்தில் கோவை நகரத்தில்தான் அதிகமான இடங்களில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. குறிப்பாக லிங்கா கௌடர் தோட்டம் 286 குடியிருப்புகள், பாலையன் தோட்டம் 290 குடியிருப்புகள், பேரூர் சாலையின் வட பகுதி 938, பேரூர் சாலையின் தென் பகுதி 677, வின்சென்ட் சாலை 210, சித்தாப்புதூர் பகுதி 150, சிலாட்டர் ஹவுஸ் பகுதி 246—ஆக மொத்தம் 2,797 ஆகும். கிட்டத்தட்ட 187.32 லட்சத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, on a point of clarification. The answer given by the Hon. Minister is confusing to the House. He said that in Coimbatore, the Slum Clearance Board has constructed houses. He also said that the Tamil Nadu Housing Board has done some work. There is only one Slum Clearance Board in Madras. Will the Hon. Minister clarify the answer?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: குடிசை மாற்று வாரியம் என்பது சென்னை நகரத்தில் மட்டும்தான் குடிசைப் பகுதிகளில் வீடுகள் கட்டிக் கொடுக்க செயல்படுகிறது. மற்ற இடங்களில் எல்லாம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்தான் குடிசைப் பகுதிகளின் மேம்பாட்டுக்காகப் பணியாற்றி வருகிறது.

திரு. எம். சுரேந்திரன்: வீட்டு வசதி வாரியம் என்பது மாநிலம் முழுவதும் பரவியிருக்கிறது. குடிசை மாற்று வாரியம் சென்னை நகரத்தில் மட்டும் இருப்பது என்றார். ஏன் குடிசை மாற்று வாரியத்தின் பணியும் மாநிலம் முழுவதும் பரவிச் செயல்படக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இந்தியாவிலேயே குடிசை மாற்று வாரியம் என்பது தமிழ்நாடு ஒன்றில்தான் இருக்கிறது. ஆகவே முதலமைச்சர் அவர்கள் குடிசை மாற்று வாரியத் திட்டங்கள் மாவட்ட அளவில் உருவாக்கப்பட வேண்டுமென்று

1973 ஆகஸ்ட் 7]

ஒரு குறிப்பிட்ட தொகையை வீட்டு வசதி வாரியத்திற்குத் தருகிறார்கள். அந்தத் தொகை மாவட்ட வாரியாகக் கடந்த இரண்டாண்டுகளாக பல திட்டங்களைச் செயல்படுத்த செலவிடப்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் இன்றையதினம் நமது மாநிலம் குடிசை மாற்று வாரியத் திட்டங்களைச் செயல்படுத்துவதுபோல வேறு எங்கும் செயல்படுத்தப்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : இப்போது குடிசை மாற்று வாரியத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால் ஆயிரக்கணக்கான கிராமங்களில் இன்னும் எத்தனையோ ஏழைகள் தங்க இடமின்றி, குடிசைகள் கூட இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்குக் குடிசை போட்டுக்கொள்ள சொந்த நிலமும், அந்த நிலத்தில் குடிசை போட பணமும் கொடுக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: குடியிருப்புச் சட்டம் எனக் கொண்டுவந்து இதே மன்றத்தில் நிறைவேற்றி விவசாயக் கூலிகள் அத்தனை பேர்களுக்கும் அவர்கள் வசிக்கிற அடிமனைகளைச் சொந்தமாக்கி, பட்டா வழங்கியிருப்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன். அரசாங்க புறம்போக்கு நிலங்களை நிலமற்றவர்களுக்கு வீட்டு மனைக்காகப் பட்டா வழங்கி வருவதையும் எல்லோரும் அறிவார்கள். கிராமப் புறங்களில் நல்ல முறையில் வீடுகள் அமைய வேண்டும் என்பதற்காகவே சில திட்டங்கள் வகுத்திருக்கிறோம். ஏராளமான விண்ணப்பங்கள் அந்தத் திட்டங்களின்கீழ் இப்போது வந்து கொண்டிருக்கின்றன.

திரு. கே. என். குமாரசாமி : குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீட்டு வசதியை உண்டாக்கிக் கொடுக்க மத்திய அரசாங்கம் இப்போது ஒரு திட்டம் தீட்டியிருக்கிறதே, அந்தத் திட்டம் இப்போது தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அவர்கள் எந்தத் திட்டத்தை மனதில் வைத்துச் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. மத்திய அரசாங்கத்திடம் இருப்பது அர்பன் ஹவுசிங் டெவலெப்மெண்டு கார்ப்பரேஷன் மூலமாக 50 ஆயிரம்

பேர்களுக்கும் அதிகமாக மக்கள் உள்ள நகரங்களை விரிவுபடுத்தவும், அழகுபடுத்தவும் அவர்கள் தொகை தருகிறார்கள். வேறு எந்தத் திட்டமும் என் கவனத்தில் இல்லை.

New buses for express services

* 69 *Q.*—THIRU DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Government have any proposal to replace all the old express buses with new ones; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: விரைவுப் பேருந்துகள் 2 அல்லது 3 ஆண்டுகள் ஓடிய பிறகு அல்லது 1,15,000 மைல்கள் ஓடி முடித்த பிறகு அகற்றப்பட்டு அவற்றிற்குப் பதிலாக புதிய பேருந்துகளை விடுவது என்று துறை முடிவு செய்துள்ளது. ஆகவே, அதற்கேற்றவாறும் தேவைப்படும்போதும் அவை அகற்றப்பட்டு அவற்றிற்குப் பதிலாகப் புதிய பேருந்துகள் விடப்படும்.

DR. H. V. HANDE: Sir, will the Hon. Minister consider the proposal to replace old long distance buses by new buses? If necessary, they can be transferred to short distance routes. Then only the passengers can be sure of reaching their destination. There was such a proposal under the consideration of the previous Ministry. So, will the Government consider that the safety and dependability of the long distance passengers are properly looked after by the department concerned?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்தின்படியேதான் புதிதாக வாங்கப்படுகின்ற பேருந்துகளை முதலில் நீண்ட வழித்தடங்களிலும் ஓராண்டு, அல்லது ஈராண்டுகள் ஆனபிறகு அதே பேருந்துகளை மாவட்ட வழித் தடங்களிலும், நகர வழித் தடங்களிலும் விடுவது என்றும் பிறகு மாற்றிவிடுவது என்றும், ஆக, நீண்ட வழித் தடங்களில் புதிய பேருந்துகளை விடுவது என்பதை அரசு கொள்கை அளவிலே ஒத்துக்கொண்டு செயல்படுத்தி வருகிறது.